பக்கங்கள்: 12

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 12 சனிக்கிழமை 25.05.2024 கதிர் 199

# உண்மை அறியும் ஆணைக்குழுவின் நீதித்துறை அதிகாரங்கள் எப்படிப்பட்டவை?

## தீர்மானிக்கவேண்டும் என்கிறார் ரணில்




இலங்கை அமைக்கவுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவே நடைமுறைப்படுத்தும் வகையில் அதற்கு நீதித்துறை அதிகாரங்கள் வழங்கப்படவேண்டுமா அல்லது அந்த ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார். யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையோடு சேர்ந்ததாக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கென உயர்கல்வி அமைச்சின் நிதியில் அமைக்கப்பட்ட மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக் கட்டடத்தின் திறப்பு விழாவில் அவர் கலந்துகொண்டார்.

நீண்ட வார விடுமுறையில் வந்திருக்கும் தான், வந்த இடத்தில் இந்தத் திறப்பு விழா மற்றும் நிகழ்வுகளில் கலந்துகொள்கிறார் என்று ஜனாதிபதி தெரிவித்தார். நிகழ்வின் 'ஹைலைட்' அதுவல்ல. வழக்கத்துக்கு மாறாக நிகழ்வில் ஜனாதிபதிக்கு ஒரே பாராட்டு மழை. அவரது அமைச்சரவையில் அமைச்சராக இருக்கக்கூடியவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அப்படிப் பாராட்டி இருந்தால், அது வழக்கமானதுதானே அதைத் தவிர வேறு வழியென்ன இருக்கின்றது என்று கடந்துபோய்விடலாம். ஆனால் இந்தத் தடவை பாராட்டுக்குக் குறைவைக்காதவர்கள் எதிர்த் ☞ 2

## தீவுகளுக்கான படகுச் சேவை இன்றும் இடைநிறுத்தம்

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் யாழ். தீவகங்களுக்கு இடையிலான படகுச்சேவை நேற்றையதினம் இடைநிறுத்தப்பட்டது. இன்றும் சேவைகள் இடம்பெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடற்பிராந்தியங்களில் கடும் காற்று வீசுவதால், யாழ்ப்பாணம் குறிகட்டுவானில் இருந்து நெடுந்தீவிற்கான படகுச் சேவை இடைநிறுத்தப்பட்டது.

அத்துடன், ஊர்காவற்றுறை கண்ணகியம்மன் இறங்குதுறையிலிருந்து அனலைதீவு ☞ 8

## ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் அவரது மனைவியுடன் கைது

### ரஷ்யா, உக்ரைனுக்கு படையினரைக் கடத்தியதற்காக

ரஷ்யா -உக்ரைன் போருக்காக இலங்கையைச்சேர்ந்த ஓய்வுபெற்ற படையினரை அனுப்பி ஆட்கடத்தலில் ஈடுபட்டமை தொடர்பில் ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஒருவரும் அவரது மனைவியும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேஜர் வத்தளையிலும் அவரது மனைவி பொரளையிலும் ☞ 2

## ரணில் மீது நம்பிக்கையுண்டு அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது எமக்கு நம்பிக்கை உள்ளது என்று தெரிவித்தார் மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நிர்மாணிக்கப்பட்ட மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி துறை கட்டடத்தை நேற்று முற்பகல் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டதன் பின்னர் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித் ததாவது:

2003ஆம்ஆண்டு ☞ 2

## யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாக தரமுயரும்

### அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்கிறார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை இலங்கையின் அடுத்த தேசிய வைத்திய சாலையாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை ஆளும் தரப்பு எடுத்து வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார். எனினும் அது எப்போது தரமுயர்த்தப்படும் என்பதை அவர் தெரிவிக்கவில்லை.

யாழ். போதனா வைத்திய சாலையோடு சேர்த்து அமைக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி துறை கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டத்திற்கு தேசிய வைத்தியசாலையை வழங்குமாறு நீங்கள் அனைவரும் ஆளும் தரப்பிடம் கோரிக்கை விடுத்தீர்கள். கராப்பிட்டிய வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக தரமுயர்த்துவதற்கு கடந்த வாரம் அமைச்சரவையில் அனுமதி வழங்கினோம். அத்துடன், யாழ்ப்பாண வைத்திய சாலையை அடுத்த தேசிய வைத்திய சாலையாக மாற்றுவதற்கும் நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உயர்தர சுகாதார சேவையை உறுதிப்படுத்த வேண்டிய ☞ 2

## வடமாகாணத்துக்கான வீட்டுத்திட்டம் அடுத்தாண்டு முதல் மீள தொடங்கும்

### ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவிப்பு

பொருளாதார நெருக்கடி காரணமாக இடைநிறுத்தப்பட்ட வடக்கு மாகாண மக்களுக்கான வீட்டுத்திட்டம் அடுத்த ஆண்டு முதல் மீண்டும் தொடங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

'உறுமய' வேலைத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட மக்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வில் நேற்றையதினம் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு ☞ 8

## மரங்கள் முறியும் அபாயம் இருப்பின் 117 என்ற இலக்கத்திற்கு அறிவியுங்கள்

வீதியோரங்களில் அல்லது பொது இடங்களில் மரங்கள் முறிந்து விழக்கூடிய அபாயம் இருப்பது தெரிந்தால் இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் 117 என்ற இலக்கத்திற்குத் தொடர்புகொண்டு தகவல் தெரிவியுங் கள் என்று இடர் முகாமைத்துவ மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சீரற்ற காலநிலை தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு செய்கிறது. அந்த அறிவித்தல்களின் பிரகாரம் செயற்படுவது அனைவரதும் கடமை. வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிவித்தல்களுக்கு கவனம் செலுத்துமாறு நாங்கள் நாட்டு மக்களைக் ☞ 2

## ஜனாதிபதியாகப் பதவியேற்று 2 வருடங்களுள்

## வடக்கின் அபிவிருத்திக்காக பல பணியாற்றியவர் ரணில்

### நெகிழ்ந்து பாராட்டினார் சித்தார்த்தன்

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற இரண்டு வருடங்களுக்குள் வடமாகாண அபிவிருத்திக்காகப் பல பணிகளைச் செய்துள்ளார் என்று பாராட்டினார் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நிர்மாணிக்கப்பட்ட மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி துறை கட்டடத்தை நேற்று முற்பகல் ஜனாதிபதி திறந்து வைத்த பின்னர் நடைபெற்ற நிகழ்வில் கலநச்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் தரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகப் ☞ 8

## ரணிலுக்கு தடையாக இருந்ததற்காக வடக்கு மக்கள் இன்று வருத்தப்படுவர்

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதிப் பயணத்திற்கு 2005ஆம் ஆண்டு தாம் தடையாக இருந்தார்கள் என்பது குறித்து வடபகுதி மக்கள் வருத்தப்படுவார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடத்தில் நிர்மாணிக்கப்பட்ட மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி துறை கட்டடத்தை நேற்று முற்பகல் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டதன் பின்னர் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

2005 ஜனாதிபதித் தேர்தலை வடக்குகிழக்கு மக்கள் புறக்கணித்தனர். இதனால் அந்தத் ☞ 8

## உ ஏற்பட்ட இடரிற்கு இதுவரை 6 பேர் உயிரிழப்பு

நாட்டில் நிலவும் பலத்த மழையுடனான வானிலையால் ஏற்பட்ட இடர் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது.

புத்தளம் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

இடர்களினால் 11 பேர் காயமடைந்துள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

15 மாவட்டங்களில் மழையுடனான வானிலையால் 34,880 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இடர்களினால் 246 பேர், 74 பாதுகாப்பான இடங்களில் ☞ 8

காலைக்கதிர்
Kalaikkathir

# மழைக் காலநிலை தொடரும்

தென்மேல் பருவப் பெயர்ச்சியினால் நாட்டில் தொடர்ந்தும் மழை மற்றும் அதிக காற்றுடன் கூடிய வானிலை நீடிக்குமென எதிர்வுகூறப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், தென் மற்றும் வட மாகாணங்களில் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் சில இடங்களிலும் 150 மில்லிமீட்டர் மழை பெய்யும் சாத்தியமுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் மன்னார், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் 100மில்லிமீட்டருக்கும்அதிகமழைவீழ்ச்சிபதிவாகுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், நாட்டின் ஏனைய பிரதேசங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியமுள்ளதாகவும்வளிமண்டலவியல்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 10 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

பதுளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, காலி, குருநாகல், நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் சில பிரதேச செயலக பிரிவுகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கையே தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கொழும்பு மாவட்டத்தின் சீதாவாக்கை பிரதேச செயலக பிரிவிற்கும் களுத்துறை மாவட்டத்தின் மத்துகம மற்றும் புலத்சிங்கள பிரதேச செயலக பிரிவுகளுக்கும் செம்மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ, இரத்தினபுரி மாவட்டத்தின் எலப்பாத்த, இரத்தினபுரி, குருவிட்ட, கிரியெல்ல, எஹெலியகொட, அயகம, கலவான, இம்புல்பே மற்றும் பலாங்கொடை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கும் செம்மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் வசிக்கும் மக்கள், மண்மேடு சரிதல், மரங்கள் முறிந்து வீழ்தல், கற்பாறைகள் சரிதல், நிலம் தாழிறங்குதல் உள்ளிட்ட அனர்த்தங்கள் தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, களனி கங்கை, களு கங்கை, கிங் கங்கை மற்றும் அத்தனகலு ஓயா ஆகியவற்றின் நீர் மட்டம் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது. இதனால், குறித்த கங்கைகளை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்களை அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## இனி இது .....

தரப்பினர்.

ரணில் நல்லவர், வல்லவர், நாலும்தெரிந்தவர் என்றெல்லாமும் தமிழ் மக்களுக்காக, வடக்கு மக்களுக்காக அவர் அதைச் செய்தார், இதைச் செய்தார், உதைச் செய்தார் என்பதாகவும் ஒரே பாராட்டு. அத்தனையையும் வழங்கியவர்கள் எமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள். அதில் முக்கியமானவர் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன். இதுநாள் வரைக்கும் தமிழ்ப் பொது வேட்பாளர் என்கிற நதை மற்றும் திரைக்கதையின் பின்னால் பதுங்கிக்கொண்டு நின்ற வர். நேற்று ரணிலுக்கு ஆதரவாக புலியாகப் பாய்ந்து ஒரே பாராட்டு மழை. ரணில் ஒரு ஆண்டவர் என்று சொல்லாதது மட்டும்தான் ஒரே குறை.

கடந்த 15 வருடங்களில் ரணில் உட்பட எந்தவொரு ஜனாதிபதியும் தமிழ் மக்களுக்கு எதுவும் செய்யவில்லை, அரசியல் தீர்வு விடயத்தில் ஏமாற்றிவிட்டார்கள், அதனால் அவர்களை நம்பி இனிப் பயனில்லை என்றுதான் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தப் போகிறார்கள் என்று சொன்னார்கள். அந்த விடயத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிதான் முதலில் கொள்கையளவில் இணக்கத்திற்கு வந்திருப்பதாக அறிவித்தது. சித்தார்த்தன் அந்தக் கூட்டணியின் இணைத் தலைவர். இதுவொரு மோசமான யோசனை, இதில் தனக்கு உடன்பாடில்லை என்றாலும் ஒற்றுமை ஒற்றுமை என்று இவர்கள் பேசுவதால் தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் நானும் அவர்களோடு நிற்கின்றேன் என்று வெளிப்படையாகவே கூறிவந்தவர்தான் சித்தார்த்தன், என்றாலும் ''ஒற்றுமையின்'' பெயரிலாவது அவர் ரணிலுக்கு எதிராகத் தமிழ்ப் பொது வேட்பாளர் தரப்பில் நிற்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அப்படிப்பட்ட மனிதர், அதாவது ஜனாதிபதி ரணில் தமிழர்களுக்கு எதையும்செய்யவில்லை,செய்யவும் மாட்டார், ஏமாற்றுப் பேர்வழி என்று கூறிய தமிழ்ப் பொதுவேட்பாளர் தரப்பினருடன் இணைந்திருந்த சித்தார்த்தன், நேற்று ரணிலைப் புகழ்ந்த விதத்தைப் பார்த்தால் "அந்த மனுசன் தானா இது" என்று எண்ணத் தோன்றும். நடிகர் வடிவேலு பேசும் வசனம் போல. "அது வேற வாய், இது நாற வாய்" போலும்.

அதேகூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் ஜனாதிபதியைப் புகழ்ந்து பேசத் தவறவேயில்லை. வடக்கு மக்களுக்காக ரணில் அது, இது எல்லாம் செய்தார் என்றார் அவரும். அதற்கும் ஒருபடி மேலே போய், 2005இல் ஜனாதிபதித் தேர்தலைப்புறக்கணித்துரணிலைத் தோற்கடித்ததற்காக வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் இப்போது வருத்தப்படுவார்கள் என்றும் ரணிலுக்கு ஒரு ஐஸ் வைத்தார். ஆனால், அந்தப் படிப்பினை யால்தான் ரணில் இப்போதெல்லாம் அடிக்கடி வடக்குக்கு வருகின்றார் போலும் என்று ஒரு குட்டு வைத்தாலும்கூட அவரது பேச்சின் பெரும் பகுதியும் ஜனாதிபதிக்கான பாராட்டுப் பத்திரமாகவே இருந்தது.

இத்தனைக்கும் ரணில் ஜனாதிபதியானது முதல் அரசியல் வெளியில் இருவரும் கடுமையாக மோதிக்கொள்பவர்களாகவே அறியப்படுகின்றார்கள். 2022க்குப் பின்னர் ரணிலின் அரசியலுக்கான கடும் விமர்சகராகவே சுமந்திரன் இருந்து வந்திருக்கிறார். நாடாளுமன்றத்திற்கு உள்ளும் புறமும் அவர் ரணிலைக் காரசாரமாக விமர்சிக்காது இருந்ததில்லை. இருந்தாலும் நேற்று அவரது உரையைக் கேட்டவர்களிடம் அவருக்கு ரணில் மீது அரசியல் எதிர்ப்பு இருக்கிறது என்று அடித்துச் சத்தியம் செய்திருந்தாலும் நம்பியிருக்கமாட்டார்கள்.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும்நிலையில்தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்களின் இப்படிப்பட்ட மனமாற்றங்களைப்பார்க்கும்போது பத்திரிகையாளர்களானஎங்களுக்கு புத்தி எங்கே போகும்? உடனே 'சதிக் கோட்பாடு'களுக்குள்ளேதான் புத்தி எல்லாவற்றையும் தேடும். என்ன "டீல்" முடிந்ததோ என்று மண்டையைப் பிய்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உண்மை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவின்பரிந்துரைகளின் அடிப்படையில் நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய தனி நீதிமன்றம் வேண்டுமா என்பதை தீர்மானிக்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

உண்மை அறியும் ஆணைக்குழுவை அமைக்க ஆளும் தரப்பு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்குதமிழ்மக்களிடம் இருந்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்களிடம் இருந்தும் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுவரும் நிலையிலும் ஆணைக்குழுவோடு இணைந்த நீதித்துறை அதிகாரம் குறித்து ஜனாதிபதியாழ்ப்பாணத்தில்கருத்துத் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ நிர்மாணிக்கப்பட்ட மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி துறை கட்டடத்தை நேற்று முற்பகல் திறந்து வைக்கும்நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டம் நீண்டகாலமாக அபிவிருத்தியின் பயனை அனுபவிக்கவில்லை. வருமானம் போதியளவில் இல்லை. மக்கள் வேலைத் தேடும் நிலை காணப்படுகிறது. யாழ். மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான அநேகமான சாத்தியங்கள் உள்ளன.

யாழ். மாவட்ட மக்களின் காணிப் பிரச்சினைகள் உள்ளிட்ட சில பிரச்சினைகளை எம்மால் தீர்க்க முடிந்துள்ளது. தடுப்புக்காவலில் உள்ள கைதிகள் தொடர்பில் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அது தொடர்பான பிரச்சினைகளும் உள்ளன. எங்களால் இன்னும் இதனை முடிவுக்குக் கொண்டு வர முடியவில்லை. அதற்கான தீர்வுகள் தற்போதுள்ள அரசியல் பிரச்சினைகளைச்சுற்றியே உள்ளன.

நல்லிணக்கத்தைக் கட்டியெழுப் புதல், காணாமல் போனோர் விவகாரம், இழப்பீடுகள், உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக நாம் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. இந்தப் பிரச்சனைகள் அனைத்தையும் தீர்க்க இதுவே நேரம் என்று நான் நம்புகிறேன்.

அதற்கு அனைவரும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சித்து வருவதோடு, வடகிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அதற்கான நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளேன்.

முன்னைய ஆணைக்குழு அறிக்கைகள் அனைத்தையும் ஆராய்ந்து தொகுக்கப்பட்ட நவாஸ் ஆணைக்குழுவின் அறிக்கை அண்மமையில் எமக்கு கிடைத்தது. இந்த அனைத்து ஆணைக்குழு அறிக்கைகளின் தாய் அறிக்கையாகவும், இது தொடர்பான கடைசி ஆணைக்குழு அறிக்கையும் அதுவாகவே இருக்கும் என்று நான் நினைக்கிறேன். இதற்காக மற்றுமொரு ஆணைக்குழுவின் அவசியம் இல்லை.

காணாமல்போனோர் அலுவலகம் மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டும் என்ற அவர்களின் பரிந்துரையை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதை அப்படியே செய்யவேண்டும். காணாமற்போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீடுகள் தொடர்பான முழுப் பிரச்சினைக்கான தீர்வுகளிலும் மாற்றங்கள் செய்வதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

பொருளாதார நெருக்கடியால், கடந்த இரண்டு ஆண்டுகளாக, எங்களால் அதிகளவு இழப்பீட்டுத் தொகையை செலுத்த முடியவில்லை. எனவே அதற்காக பணம் ஒதுக்கவேண்டும். அத்துடன் எது உண்மை, என்ன நடந்தது, நல்லிணக்கத்திற்காக நாம் என்ன செய்கிறோம் என்ற கேள்விக்குறி காணப்படுகிறது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை கொண்டு வருவதற்கு ஆளும் தரப்பு உறுதிபூண்டுள்ளது. ஆனால் நீதிமன்ற அதிகாரம் குறித்த பிரச்சினைகள் அதற்குள் காணப்படுகிறது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் நடைமுறைப் படுத்தப்படும் நீதித்துறை அதிகாரங்கள் எமக்கு இருக்க வேண்டுமா அல்லது அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நீதித்துறை அதிகாரங்களைச் செயற்படுத்தும் தனி நீதிமன்றம் வேண்டுமா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். மேலும் இந்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும். எனவே, இது குறித்து ஆளும்தரப்பு முடிவெடுக்கவேண்டும்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவைசட்டமாக்குவதற்கு எமக்கு ஆதரவளித்த மூன்று தூதுவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடி தீர்மானம் எடுக்குமாறு இரண்டு அமைச்சர்களுக்கும் அறிவித்துள்ளேன்.

இதன்மூலம் பல பிரச்சினைகள் தீரும் என நம்புகிறேன். எனவே, இதுபற்றி கலந்துராயடி, சாத்தியமான தீர்வுகளுடன் இணக்கப்பாட்டுக்கு வருவோம் என்று அமைச்சர்களிடம் தெரிவித்தேன்.

அத்துடன், வட மாகாணம் அபிவிருத்திக்கான சாத்தியக் கூறுகளை அதிகமாக கொண்டிருக்கிறது. இந்த மாகாணத்தில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பெருமளவில் உள்ளது. அதனால் யாழ்ப்பாணத்தை இலங்கையின் முக்கிய வலுசக்தி மையமாகக் கட்டியெழுப்ப முடியும். வடமாகாணத்தில் இந்த வலுசக்தியை நாம் இதுவரை பயன்படுத்தவில்லை. ஆனாலும் ஜிகாவொட்கள் அளவிலான வலுசக்தி இங்கு உள்ளது.

நாட்டில் போட்டி, ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்க எதிர்பார்க்கிறோம். வடக்கு மாகாணம் அதற்குள்ளும் முக்கியமான இடத்தை பிடிக்கிறது. இங்குள்ள விவசாயிகளுக்கு அதற்கான திறன் உள்ளது. இதன் மூலம் வடமாகாண மக்களின் வருமான மட்டத்தை பெருமளவில் மேம்படுத்த முடியும்.

கைத்தொழில்களைப் பொறுத்த வரையில் காங்கேசந்துறையில் முதலாவது முதலீட்டு வலயத்தை அமைப்பது குறித்தும், பின்னர் பரந்தன் மற்றும் மாங்குளத்தில் கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பிப்பது குறித்தும் ஆலோசித்து வருகிறோம். மேலும் திருகோணமலையை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவுடன் இணைந்து செயற்படுகின்றோம். வடக்கில் சுற்றுலாத்துறைக்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆராய்ந்து வருகிறோம்.

எதிர்வரும் காலங்களில் ஏற்பட வுள்ள தரைமார்க்க தொடர்பின் மூலம் யாழ்ப்பாணம் உள்ளடங்களாக முழு வடக்கு மாகாணமும் புரட்சிகர மாக மாறும். இவ்வாறான செயற் பாடுகளின் மூலம் வடமாகாணத்தை இலங்கையின் பிரதான பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்ய முடியும்.

யாழ். பல்கலைக்கழக மருத்து வபீட மாணவர்களின் சில நடனக் அம்சங்கள் இங்கு இடம்பெற்றன. அவர்களைப் பாராட்டுகிறேன். அவர்களில் பெரும்பாலானோர் 21 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று துணைவேந்தர் கூறினார். அதாவது 2002 மற்றும் 2003 இல் பிறந்தவர்கள். அவர்களுக்கு சிறந்த எதிர்காலம் உருவாக்கப்படவேண்டும்.

அவர்கள் தங்கள் எதிர்காலத்திலம் குறித்து அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். அவர்களுக்கான எதிர்காலத்தை உருவாக்கவேண்டும். இதன் காரணமாகவே புதிய பொருளாதாரக் கட்டமைப்பிற்குள் விரைவான அபிவிருத்தியை நோக்கிச் செல்வதற்கான சட்டங்களைக் கொண்டுவருவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம் என்பதையும் கூற வேண்டும் என்றார்.

## யாழ்ப்பாணம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவை உள்ளது. அப்போது கொழும்பில் மாத்திரமன்றி தெற்கு, வடக்கு, மற்றும் மத்திய மாகாணங்களிலும் சிறந்ததொரு வைத்தியசாலைக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படும். அத்தோடு நின்று விடாமல் அபிவிருத்தி செய்ய வேண்டிய ஏனைய பகுதிகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

நான் அடிக்கடி யாழ். மாவட்டத் திற்கு வருகை தருவதாக இங்கு குறிப்பிடப்பட்டது. உண்மையில் நான் இந்த முறை இங்கு வைத்தியசாலைகளைத் திறப்பதற்காக வந்தேன். நான் ஒரு நீண்ட வார இறுதி விடுமுறையில் வந்துள்ளேன். அதற்காக நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

நான் கடந்த முறை இங்கு வருகை தந்தபோது, நெதர்லாந்துத் தூதுவர் இந்த இரண்டு புதிய மருத்துவமனைகளைத் திறப்பதற்கு இங்கு வருமாறு என்னிடம் கேட்டுக்கொண்டார். அதனால் இந்த வார இறுதியில் இங்கு வந்து இந்தச் செயற்பாடுகளை நிறைவு செய்யத் தீர்மானித்தேன் - என்றார்.

## மரங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுக்கொள்கிறோம்.

மரங்கள் முறிந்து விழும் சம்ப வங்கள் அதிகரித்து வருகின்றன. இது தொடர்பாக இதுவரை கவனம் செலுத்தப்பட்டிருப்பதாக தெரியவில்லை. மரங்கள் விழு வது தொடர்பாக எச்சரிக்கை விடுப் பதற்கென ஒரு நிறுவனம் எமது நாட்டில் இல்லை. இவ்வாறான எச்சரிக்கை விடுக்கும் பொறுப்பை கட்டட ஆராய்ச்சி நிறுவனத்துக்கு நாங்கள் வழங்கி இருக்கிறோம்.

அந்த துறையை முன்னேற்ற வேண்டும். துறைசார் நிபுணர்களை இதற்கு இணைத்துக்கொள்ள வேண்டும். அதேபோன்று முறியக்கூடிய மரங்கள் தொடர்பில் தேசிய கொள்கை அமைக்க வேண்டும். இதுதொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்குப் பெரும் பொறுப்பு இருக்கிறது.

அதேநேரம் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கு பிரதான காரணமாக இருப்பது, உள்ளூராட்சி நிறுவனங்கள் அனுமதி இல்லாமல் கட்டுமானங்களை அமைப்பதற்கு அனுமதிப்பதாகும். சட்டரோத கட்டடங்களை நிறுத்துவதற்கு அனுமதியளிப்பதில் ஏற்பட்டிருக்கும் தாமதிப்பை மறைக்க வேண்டாம் என அந்த நிறுனங்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்படும் இடங்களாக இரத்தினபுரி, மாத்தறை. காலி, கொழும்பு, கழுத்துறை. கம்பஹா, அக்குரணை போன்றன இனம் காணப்பட்டிருக்கின்றன. இதற்கு நடவடிக்கை எடுக்காமல், தொடர்ந்து நிவாரணம், இழப்பீடு என வழங்கிக்கொண்டிருக்க முடியாது.

நாட்டில் எப்பிரதேசத்திலும் இடர் நிலைமை அல்லது மரம் முறிந்துவிழும் ஆபத்து இருக்குமானால் அதுதொடர்பில் இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் 117என்ற துரித இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும். அதேபோன்று கிராம சேவகர் ஊடாக பிரதேச செயலாளரை அறிவுறுத்த முடியும் என்றார்.

## ஓய்வுபெற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் குறித்த நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், மனைவி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் இதுவரை 9 பேர் கைது செய்யப் பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# மன்னார் வாழ் மக்களுக்கு 2 பெரும் அச்சுறுத்தல்கள்

## சுமந்திரன் சுட்டிக்காட்டு

மன்னாரில்உள்ளமக்கள்இரண்டுபெரும்அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் தீவில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கணிய மணல் அகழ்வு நடவடிக்கைகள் தொடர்பாக விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்;று (வியாழக் கிழமை) இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே சுமந்திரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மன்னாரில் நேற்று (வியாழக்கிழமை) பொது அமைப்புக் களை ஒன்றிணைத்து விசேட சந்திப்பை மேற்கொண்டோம். மக்களின் நலன் கருதி அமைக்கப்பட்ட அமைப்புக்களை சந்தித்து மன்னார் மாவட்ட மக்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினோம்.

மன்னாரில் இரண்டு பாரிய அச்சுறுத்தல்களை மக்கள் எதிர்கொள்கின்றார்கள். காற்றாலை அமைக்கப்பட்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் செயற்திட்டத்தில் மூன்று திட்டங்கள் உள்ளன எனக் கூறப்படுகிறது.

ஒரு திட்டத்தின் அடிப்படையில் காற்றாடிகள் அமைக்கப்பட்டுள்ளன. மற்றைய இரு திட்டங்களையும் உடனடியாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டுள்ளது.

ஏற்கனவேஅமைக்கப்பட்டுள்ளதைஅடிப்படையாகவைத்து காற்றாலை அமைக்கின்றதன் மூலம் இப்பிரதேசங்களில் எற்படுகின்ற பல விதமான பாதிப்புக்களை மக்கள் நேரடியாக அனுபவிக்கின்றார்கள்.

குறிப்பாகக் கடற்றொழிலாளர் சமூகம் வழமையாக பிடிக்கும் மீன்களின் தொகை பாரிய அளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது. மற்றும் நீரோட்டங்களின் திசைகள் வழமை போல் இல்லாது மாற்றமடைந்துள்ளன.

குறிப்பாக கரைவலை மீன்பிடி முறையில் பாரிய அளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதை வைத்தும், வேறு பல விடயங்களை வைத்தும் காற்றாலையை மன்னார் தீவுடன் சேர்ந்து அமைப்பது மன்னார் தீவுக்கு பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பது புலனாகின்றது.

காற்றாலை மின்சாரம் அமைக்கலாம். ஆனால் அதற்கான உகந்த இடங்களை தெரிவு செய்து முன்னெடுக்க வேண்டும். மன்னார் தீவு என்பது கடல் மட்டத்தில் இருந்து சற்று குறைவான இடத்திலே காணப்படுகின்றது. இந்த தீவு இச்செயற்திட்டத்திற்கு பொருத்தமானதாக இல்லை என்பது இங்கு வாழும் அனைவரதும் நிலைப்பாடு.

சரியான முறையில் ஆராய்ந்து இச் செயற்திட்டம் முன்னெடுக்கப்படவில்லை. ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இதனால் பல வித பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்பது தெரியவருகிறது.

எனவே இத்திட்டங்களை நிறுத்துவதற்கும், ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளதிட்டத்தில்ஏற்பட்டுள்ளபின்விளைவுகள் மற்றும் பாதிப்புகளை நிவர்த்தி செய்யும் வகையில் சில மாற்று வழிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

எனவே இவ் விடயங்களை உடனடியாகக் கவனத்தில் எடுப்போம். இவ்விடயம் தொடர்பாக ஏற்கனவே சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு ஒன்று நீதிமன்றத்தை நாடியுள்ளது.

இதனடிப்படையில் மன்னாரில் இருந்து மக்கள் சார்பாகவும் இவ்வாறான ஒரு செயற்திட்டத்தை அவர்களுடன் இணைந்து முன்னெடுப்பதற்கு நாங்கள் எதிர்வரும் வாரம் நடவடிக்கைகளை எடுக்க உள்ளோம்.

மன்னாரில் உள்ள பல ஏக்கர் தனியார் காணிகளும் அபகரிக்கப்பட்டு அதனைச் சுற்றி வேலி அடைத்து பல செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மன்னார் பிரஜைகள் குழு, கடற்றொழிலாளர் அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

(05)

# மன்னார் மாவட்டத்தில் தனியார் காணிகளை நைஸாக கையகப்படுத்தும் நிறுவனங்கள்

## பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்தார் சுமந்திரன்




மன்னார் தீவக பகுதிக்குள் தனியாருக்கு சொந்தமான காணிகளை தொடர்ச்சியாக சில காணி இடைத்தரகர்கள் ஊடாக சில தனியார் கம்பெனிகள் சட்ட விரோதமாக சுவீகரிக்கும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளை நிறுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் தொடர்பாக கலந்தாலோசிக்கும் முகமாக மன்னார் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் ஜனாதிபதி சட்டத்தரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனுக்கும் பாதிக்கப்பட்ட தனியார் காணி உரிமையாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு வியாழக்கிழமை மன்னார் மெசிடோ அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, மன்னார் நடுக்குடா, கொன்னையன் குடியிருப்பு போன்ற பகுதிகளில் பாரம்பரியமாக தாங்கள் வசித்துவரும் காணிகளை தனியார் நிறுவனங்கள் தொடர்ச்சியாக வேலிகள் அடைத்து கையகப்படுத்துகின்றன எனவும், இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தும் பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் தனியார் காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, தனியார் காணி ஒன்றைக் கொள்வனவு செய்யும் சில நிறுவனங்கள், அந்த காணிகளை மாத்திரமின்றி அதை சூழவுள்ள காணிகளையும் சுவீகரிப்பதாகவும் கூறியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக எடுக்கவேண்டிய சட்ட நடவடிக்கைகள் பற்றி தனியார் காணி உரிமையாளர்களுக்கு சட்டத்தரணி சுமந்திரனால் தெளிவுபடுத்தப்பட்டதுடன், இந்த பிரச்சினை தொடர்பாக வழக்குதாக்கல் செய்வதற்கு தேவையான ஆவணங்களை தயாரிப்பது தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது.

அதேவேளை இம்மாதம் சட்ட விரோதமாக காணி சுவீகரிப்பில் ஈடுபட்ட நிறுவனத்துக்கு எதிராக முதல் கட்டமாக மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக தனியாருக்கு சொந்தமான காணிகள் தனி நபர்களாலும் சில நிறுவனங்களாலும் அபகரிக்கப்பட்டு, கனிய மணல் அகழ்வுக்கு வழங்குவதற்கான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)




# கொரிய மொழிப் பரீட்சை பெறுபேறு வெளியாகியது

உற்பத்தி மற்றும் கடற்றொழில் துறைக்கு தொடர்புடையதாக கொரிய மொழி தேர்ச்சி பரீட்சையின் பெறுபேறு வெளியிடப்பட்டுள்ளதுடன் பரீட்சை எழுதியவர்களில் 95 வீதமானவர்கள் சித்தியடைந்துள்ளனர் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டு இடம்பெற்ற கொரிய மொழி தேர்ச்சி பரீட் சைக்காக 3580 பரீட்சாத்திகள் தோற்றியிருந்தனர். அதில் 3422 பேர் சித்தியடைந்துள்ளனர். இது பரீட்சைக்கு தோற்றியவர்களில் 95.6 வீதமாகும். இந்த பரீட்சையின் பெறுபேறு எதிர்வரும் 27ஆம் திகதி பணியகத்தின் இணையதளத்தில் பதிவிடப்படும்.

பரீட்சையில் சித்திபெற்ற விண் ணப்பதாரிகளுக்கான மருத்துவ பரிசோதனை எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்படும். அதேநேரம் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதார்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் ஜூன் மாதம் 6,7 மற்றும் 10ஆம் திகதிகளில் பணியகத்தின் மாகாண காரியாலயம், புலம்பெயர்ந்தோர் வள மத்திய நிலையம் மற்றும் பயிற்சி நிலையங்களில் இடம்பெறும் என வும் பணியகம் தெரிவித்துள் ளது. (05)

# சஹ்வா அரபுக் கல்லூரிக்கு புதிய அதிபராக.றமீன்-சஹ்வி



(எம்.எப்.நவாஸ்)

பாலமுனை சஹ்வா அரபுக்கல் லூரியின் பணிப்பாளர் சபை தலைவர் அஷ்ஷேக் இத்ரீஸ் ஹசன் சஹ்வியின் தலைமையில் வியாழக்கிழமை கல்லூரியில் இடம் பெற்ற புதிய அதிபர் பதவி ஏற்பு நிகழ்வின் போது புதிய அதிபராக அஷ்ஷேக் ஏஆர்.றமீன் - சஹ்வி, மதனி தனது கடமைகளைப் பொறுப் பேற்றுக்கொண்டார்.

இக்கல்லூரியின் பழைய மாணவரான இவர், கடந்த சில வருடங்களாக இங்கு நிறை வேற்று அதிபராகவும் கடமை யாற்றியிருந்தார், இவர் பாலமுனை ஏசிஜேயு கிளையின் பொருளாளராகவும் செயலாற்றி வருகின்றார்.

மேலும், இக்கல்லூரியின் பிரதி அதிபராக அஷ்ஷேக் என்பிஎம். நஜாத் (றஹ்மானி) அவர்களும் இன்று பதவி ஏற்றுக்கொண்டார். இவர் இங்கு உப அதிபராக கடமையாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சஹ்வா அறபுக்கல்லூரியின் பணிப்பாளர் சபையால் வழங்கப் பட்ட இப் புதிய அதிபர் மற்றும் பிரதி அதிபர் நியமனமானது அபுஸ்சஹ்வா அஷ்ஷேக் ஜஎல்எம்.ஹாசிம் சூரி, மதனி (ஏசிஜேயு - பிரதித்தலைவர்) அவர்களின் பங்குபற்றுதலுடன் பணிப்பாளர் சபை செயலாளர், பொருளாளர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், கல் லூரி விரிவுரையாளர்கள், மாண வர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தமிழரின் நிராகரிப்பும் ரணிலின் அறிவிப்பும்

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வந்திருந்த அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக் கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார். அதில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் நீதித்துறை அதிகாரம் குறித்துப் பேசினார்.

போர்க் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் (இவையனைத்தையும் பொதுவாகப் போர்க் குற்றங்கள் என்கிறோம்) என்பன குறித்து விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதற்காகவே இந்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்கப் போவதாக ஆளும் தரப்பு கூறிவருகின்றது. அதற்காக உண்மை மற்றும் நல்லிணக்கச் செயலணி ஒன்றையும் ஆளும் தரப்பு ஏற்கனவே அமைத்துள்ளது.

இலங்கையின் ஆளும் தரப்புக்கள் கடந்த காலங்களில் உருவாக்கிய ஆணைக்குழுக்களின் மீது தமிழ் மக்களுக்கு எந்த நம்பிக்கையும் இல்லாத காரணத்தாலும், இத்தகைய ஆணைக்குழுக்கள் வெறும் கண்துடைப்பு நடவடிக்கைகள் என்று தமிழர்கள்கருதுவதன்காரணமாகவும்புதிதாகஅமைக்கப்படவுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கும் தமிழர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

தமிழர்கள் மட்டுமல்ல, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் சில நாட்களின் முன்னர் வெளியிட்ட அறிக்கையில்கூட, இத்தகைய புதிய ஆணைக்குழுவின் மீது தமிழ் மக்களுக்குநம்பிக்கைஇல்லைஎன்பதைவெளிப்படுத்தியிருந்தது. ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் பரிந்துரைகள் எவையும் செயற்படுத்தப்படாத நிலையில் புதிய ஆணைக்குழு ஒன்றை அமைப்பதில் எந்தவிதப் பயனும் இல்லை என்றும் அது தெரிவித்திருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்கூட அண்மையில் தனது நாடாளுமன்ற உரையில் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டி புதிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கும் ஆளும் தரப்பின் யோசனையைக் கடுமையாக எதிர்த்திருந்தார்.

இப்படிக்கடுமையானஎதிர்ப்புக்கள்தெரிவிக்கப்படுகின்றபோதும், வெளிப்படுத்தப்படுகின்றபோதும் ஆளும் தரப்பு தனது யோசனையை கைவிடுவதாகவோ அந்த முயற்சிகளில் இருந்து பின்வாங்குவதாகவோ இல்லை என்பது அரசுத் தலைவரின் யாழ்ப்பாணப் பேச்சிலிருந்து தெரியவருகின்றது. அதுமட்டுமல்லாமல்தாம்அமைக்கஇருக்கும்ஆணைக்குழுவிற்கு நீதிஅதிகாரங்கள்வழங்கப்படஇருப்பதாகவும்ரணில்தெரிவித்தார். அந்தஅதிகாரங்கள்ஆணைக்குழுவிற்கேவழங்கப்படவேண்டுமா அல்லது ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய ஒரு தனி நீதிமன்றத்தை அமைத்து விசாரிக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க வேண்டியிருக்கின்றது என்றும் தெரிவித்தார்.


அரசுத் தலைவரின் அதே உரையில் அவர் மற்றொரு விடயத்தையும் குறிப்பிட்டார் ஏற்கனவே பல ஆணைக்குழுக்கள் இது தொடர்பில் விசாரணை நடத்திவிட்டதால் இனியொரு ஆணைக்குழு அமைக்கவேண்டிய தேவை இல்லை என்பதே அந்த விடயம். அதனடிப்படையில் பார்த்தால், இந்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒரு விசாரணை ஆணைக்குழுவாக அன்றி நீதி நடவடிக்கைகளை எடுக்கும் அமைப்பாகவே முக்கியமாகச் செயற்படும் என்பது போன்ற தோற்றப்பாடு ஏற்படுகின்றது. இருப்பினும் இது குறித்து அவர் மேலும் தெளிவுபடுத்தவேண்டியிருக்கின்றது.

ஏற்கனவே அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கான நீதி நடவடிக்கையாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு செயற்படுமாக இருந்தால் அது வரவேற்கப்படக்கூடியதே. ஆனால், இதுவரையில் அப்படிப்பட்ட எந்தவொரு கருத்தும் இது சார்ந்த கலந்துரையாடல்களில் தெரிவிக்கப்படவில்லை. இப்போது வடக்கிற்கு வந்திருக்கும் சமயத்தில் அரசுத் தலைவர் இப்படிக் கூறுவது எவ்வளவு தூரம் நம்பகத்தன்மை வாய்ந்தது என்கிற கேள்வியையும்தவிர்க்கமுடியவில்லை. உண்மையில்நீதித்துறை நடவடிக்கைக்கானதாக அன்றி மற்றொரு ஆணைக்குழுவாக இந்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமையும் பட்சத்தில் தமிழர்கள் அதனை முற்றாக நிராகரிக்கிறார்கள் என்பதை அரசுத் தலைவர் புரிந்துகொள்வேண்டியது அவசியம்.

# பாலூட்டிகளுக்கு எதற்காக ஐந்து விரல்கள்?

**சு. இராமசுப்பிரமணியன்**

மனிதர்களுக்குக் கைகளிலும் கால்களிலும் ஐந்து விரல்கள் இருப்பதுபோல, பூனைகள், நாய்கள் உள்ளிட்ட பெரும்பாலான பாலூட்டிகளின் கால் பாதங்களில் ஐந்து விரல்கள் அமைந்திருப்பது ஏன் என்னும் கேள்விக்கு நீண்ட காலமாக அறிவியலாளர்களுக்கு விடை தெரியாமல் இருந்துவருகிறது. விலங்குகளின் கால் பாதங்களில் சில விரல்கள் சுருங்கியிருக்கலாம் அல்லது இடம் மாறியிருக்கலாம். ஆனாலும் ஐந்து என்னும் எண்ணிக்கையில் மாற்றம் இருப்பதில்லை. முற்றிலும் வேறுபட்ட சூழலில் பரிணாம வளர்ச்சிபெற்றுவந்த மனிதர்களுக்கும், மயிருள்ள விலங்குகளுக்கும் இப்படி ஓர் ஒற்றுமை இருப்பதற்கான காரணம் என்னவாக இருக்க முடியும்?



இதற்கான காரணத்தை அறிந்துகொள்வதற்கு முன்பு முதுகெலும்பும், எலும்புக்கூடும் கொண்ட நான்கு கால் விலங்குகளைப் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும். ஊர்வன, பறப்பன, தவளைகள், தேரைகள் போன்ற சிறிய முதுகெலும்பு கொண்ட விலங்குகளும் நான்கு கால் விலங்குப் பிரிவில் அடங்கும். இதே பிரிவில் பாலூட்டிகள் மேன்மைப்பிரிவைச் சேர்ந்தவையாகும். வழக்கமான கால்கள் இல்லையென்றாலும்கூட திமிங்கலங்கள், சீல்கள், கடல் சிங்கங்கள் ஆகியவற்றிற்கு அவற்றின் துடுப்புக்களில் ஐந்து விரல்கள் உள்ளன.

சில விலகல்களும் உள்ளன. குதிரைகளுக்கு ஒருவிரல் மட்டுமே உள்ளது. பறவைகளின் இறக்கைகளின் ஓரத்தில் ஒரு இணைந்த விரல் எலும்பும் உள்ளது. இந்தவிலங்குகளும்கூட கருவில் ஐந்துவிரல்களுடன் உருவாகி, பிறப்பதற்கு முன்பாக சில விரல்கள் சுருங்கிவிடுவதாக அறிவியலாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். உயிரியலில், விரல்களை முடிவுசெய்வது 'ஹாக்ஸ்' மரபணுக்கள். 'ஹாக்ஸ் மரபணுக்கள்' உடலின் வடிவத்தைத் திட்டமிட்டுச் செயல்படுத்துபவை. உயிரிகளின் பரிணாம வளர்ச்சித் துறையின் உயிரியியலாளர் தாமஸ் ஸ்டீவர்ட், ஹாக்ஸ் மரபணுக்கள், மற்ற மரபணுக்களின் செயல்களை ஒழுங்குபடுத்தும் புரோட்டின்களில் தேவையான கட்டளைகளைப் பதிவுசெய்கின்றன என்று சொல்கிறார். எந்த ஒரு விலங்கின் உடலிலும், உடல் உறுப்புக்கள் சரியான இடங்களில் முடிவடையவேண்டும் என்பதற்குக் கரு உருவாகும்போதிலிருந்தே இம்மரபணுக்கள் உதவுகின்றன.

எடுத்துக்காட்டாக கைகள், கால்கள் எத்தனை நீளம் இருக்கவேண்டும் என்பதை முடிவுசெய்யும் மரபணுக்களும் ஆகும். பிறகு கைகள், கால்கள் முடியும் இடத்திற்கு அருகில் உள்ள செல்கள் தனித்தனி விரல்களை உருவாக்குகின்றன. இதன்படி விரல் மொட்டுக்கள் வளர்கின்றன. விலங்குகளைச் சார்ந்து இவ்விரல் மொட்டுக்கள் முழுமையான விரல்களாக வளர்வதும் உண்டு, திரும்பவும் உட்கவரப்படுவதும் உண்டு. இது விளக்குவதற்கு மிகவும் சிக்கலான நடைமுறை என்று ஸ்டீவர்ட் கூறுகிறார்.



கால் பாதங்களில் ஐந்து விரல்கள் உருவாகும் உயிரியல் வினை எப்போது முதன்முதலாகப் பரிணாமம்கொண்டது என்பது யாருக்கும் தெரியாத புதிராக உள்ளது. 360 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு முதன்முதலாக எட்டு விரல்களுடன் பரிணாமவளர்ச்சிபெற்ற உயிரினம், மீன்கள். பெரும்பாலான முதுகெலும்பு கொண்ட உயிரினங்களில் காணப்படும் ஐந்து விரல் அமைப்பு, ஒரு பொது மூதாதையரிடமிருந்து வந்திருக்கவேண்டும் என்பதைக் குறிக்கிறது. அதன் காரணமாக, ஒருமரபணு அல்லது உடல்கட்டமைப்பு, பொது மூதாதையரிடம் இருந்து பிரிந்துவந்த பல உயிரினங்களுக்கும் பொதுவாக அமைந்துவிடுகிறது. இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் அனைத்து

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

காலைக்கதிர் Kalaikkathir

# இரு வழிப் பாதையாக மாறிய கல்முனையின் ஒரு வழிப் பாதை



(பாறுக் ஷிஹான்)

கல்முனை நகர் இளம் வர்த்தகர்கள் திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரீஸிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க கல்முனை நகர் பிரதேசத்தில் உள்ள ஒரு வழிப் பாதை இரு வழிப் பாதையாக வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக திறக்கப்பட்டது.

இவ் உத்தியோகபூர்வ நிகழ்வு கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரம்சீன் பக்கீர் தலைமையில் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி.எம். எல். புத்திக நெறிப்படுத்தலில் ஆரம்பமானதுடன் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம பிரதம அதிதியாக கலந்து கொண்டு இரு வழிப்பாதையைதிறந்துவைத்தார்.

வியாழன் முதல் குறித்த ஒரு வழிப் பாதை ( டமாஸ் ஜூவலரி சந்தியில் இருந்து கொமர்சியல் வங்கிவரையானஒருவழிப்பாதை) இரு வழியாக மாற்றப்பட்டு பொதுப்போக்குவரத்திற்கு திறந்து வைக்கப்பட்டது.

கல்முனையின் இளம் பிரபல வர்த்தகர் எஸ்.எம். றிப்னாஸ் தலைமையிலான வர்த்தர்களான எஸ்.எம்.எம். அப்சார், எம்.எச்.எம். முபாரிக், வை.வி. சியாம், எஸ்.எம். ஜின்னா, எம்.வை.எம். பஸ்மீர், ஏ.எம்.அஸ்ஜா, எம்.எச்.எம். தஸ்லிம், ஏ.எம்.சஜாத்,ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அவர்களிடம் விடுத்த வேண்டுகோளுகிணங்க குறித்த ஒரு வழிப் பாதை இருவழிப் பாதையாக மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் கல்முனை மாநகர சபை பிரதி ஆணையாளர் ஏ.எச்.அசீம், கல்முனை மாநகர பொறியியலாளர் ஜௌஸி அப்துல் ஜப்பார்,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவரும்,திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ.பாவா, நாடாளுமன்ற உறுப்பினரின் ஆலோசகர் எம்.ஏ. கலீலூர் ரஹ்மான், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்,வர்த்தகர்கள்கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



மேலும் கல்முனை மாநகரில் நீண்டகால பிரச் சினையாக இருந்த ஒரு வழிப்பாதையை இரு வழிப் பாதையாக மாற்ற நடவடிக்கை எடுத்த பொலிஸ்உயர்அதிகாரிகளுக்குஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ்பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் நன்றி தெரிவித்துள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (05)

# பாலூட்டிகளுக்கு எதற்காக ஐந்து விரல்கள்?

4ம் பக்க தொடர்ச்சி...........

நான்குகால் முதுகெலும்பு உயிரினங்களுக்கும் பொதுமூதாதையர் ஏதோ ஒருவிதத்தில் ஐந்து விரல்களுக்குப் பரிணாம மாற்றம் கண்டு, அதன்பிறகு அந்த அமைப்பை அதனிலிருந்து பிரிந்துவந்த மற்ற உயிரினங்களுக்குக் கடத்தியிருக்கிறது என்றும் ஸ்டீவர்ட் கூறுகிறார்.

பாலூட்டிகளுக்கு ஐந்து விரல்கள் இருப்பதற்கு ஒரு பொதுமுன்னோர் இருக்கவேண்டும் என்பது சரியான விளக்கமாக இருந்தாலும், ஏன் ஐந்து விரல்கள் என்னும் கேள்விக்கு விடை இல்லை. கால ஓட்டத்தில், ஒரு மரபணு மாற்றம் கொள்ளாமல் நிலைத்திருக்கும் பண்பு காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. முதுகெலும்பும், கழுத்தும் கொண்ட பாலூட்டிகளைச் சான்றுகளாக ஸ்டீவர்ட் கூறுகிறார். பாலூட்டிகளின் முதுகெலும்பில் பெரும்பாலும் ஏழு எலும்புத்துண்டுகள் உள்ளன. இந்தக்கொள்கையின் அடிப்படையில், ஏன் ஏழு துண்டுகள் என்னும் கேள்வி எழக்கூடும். ஆனால் அதனையும் கடந்து சிந்தித்தால் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னரே ஏழு முதுகெலும்புத் துண்டுகள் சூழலுக்கு ஏற்றவாறு பயனுள்ளதாக அமைந்திருக்கிறது என்றும் கொள்ளலாம். அப்படியானால் அதனை மாற்றுவதற்கான தேவை ஏற்படவில்லை என்றும் ஆகிறது. இக்கொள்கை விளக்கம் ஏன் ஐந்து விரல்கள் என்பதற்கும் பொருந்தும்.

என்றாலும் அனைத்து ஆய்வாளர்களும் இந்தக் கொள்கையை ஏற்பதில்லை. மனிதர்கள் உள்ளிட்டு பல பாலூட்டி விலங்குகளிடம் ஐந்துக்கு மேற்பட்ட விரல்கள் இருப்பதைக் கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தின் மரபணு ஆய்வாளர் கிம்பர்லி கூப்பர் சுட்டிக்காட்டுகிறார். ஒன்றிற்கு மேற்பட்ட மரபணுத் திரிபுகள் காரணமாக ஐந்துக்கு மேற்பட்ட விரல்கள் தோன்றக்கூடும். 'இயற்கை' இதழில் வெளியாகியிருக்கும் ஆய்வுக்கட்டுரை ஒன்று சோனிக் ஹெட்கிஹாக் மரபணுவில் திரிபு ஏற்படும்போது ஐந்துக்கும் மேற்பட்ட விரல்கள் தோன்றக்கூடும் எனச் சொல்கிறது.

கூப்பர் அக்கருத்தை ஏற்கவில்லை. ஐந்துக்கு மேற்பட்ட விரல்கள் குறிப்பிட்ட மரபணுத் திரிபால் உருவாகிறது என்றால், அப்படி ஓர் இனம் ஏன் இயற்கையில் உருவாகி நிலைபெறவில்லை என்று கேள்வி எழுப்புகிறார். என்றாலும் அதற்கான உறுதியான கோட்பாட்டை யாரும் தரவில்லை என்றும் ஸ்டீவர்ட் கூறுகிறார். ஐந்துக்கு மேற்பட்ட விரல்களைக்கொண்டவர்களை அரிதினும் அரிதாகவே காணமுடிகிறது. எனவே ஐந்து விரல்கள் ஏன் என்னும் கேள்விக்கு விடைகாண்பது மிகவும் சவாலானதும், கிளர்ச்சியூட்டுவதும் ஆகும் என்றும் ஸ்டீவர்ட் கருத்துரைக்கிறார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# பலத்த காற்றுடனான மழையினால் பொகவந்தலாவயில் வீடுகள் சேதம்





பொகவந்தலாவ பொலிஸ்பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவ கெம்பியன் தோட்டத்தின் 57 பிரிவிலும் கெம்பியன் கீழ் பிரிவிலும் புதன்கிழமை இரவு பெய்த கடும் காற்றுடன் கூடிய வானிலையால் ஆறு வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த குடியிருப்புகளில் உள்ள கூரைத் தகடுகள் வீசிய பலத்த காற்றுக்கு அள்ளுண்டு சென்றுள்ளன. இதனால் ஆறு குடும்பங்களை சேர்ந்த 35 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு வீடுகளிலிருந்த சில பொருள்கள் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட குடும்பங்களைப் பிரதேசத்திற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர் மற்றும் தோட்ட முகாமைத்துவம் இணைந்து பாதிக்கப்பட்ட வீடுகளை சீர் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவளை, புதன்கிழமை இரவு வீசிய பலத்த காற்றின் காரணமாக பொகவந்தலாவ மற்றும் இராணிகாடு வரையிலான பிரதான வீதிகளின் அருகில் உள்ள மரங்கள் சரிந்து விழுந்துள்ளமையால் பொகவந்தலாவ பிரதேசத்திற்கான மின்சாரம் விநியோகமும் முழுமையாக தடைப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் காசல்ரீ நீர் தேக்கத்திற்கு நீர் ஏந்தி செல்லும் கெசல்கமுவ ஓயாவின் நீர் மட்டம் அதிகரித்துள்ளமையால் கேசல்கமுவ ஓயாவின் அன்மையில் உள்ள குடியிருப்பாளர்களை அவதானமாக இருக்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.(05)

# ஜெனரேட்டரை இயக்கிவிட்டு உறங்க சென்ற தந்தையும் மகனும் உயிரிழப்பு

ஜெனரேட்டரை இயக்கிவிட்டு உறங்கச் சென்ற தந்தையும் மகனும் திடீரென உயிரிழந்துள்ளனர் என புபுரஸ்ஸ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் வியாழக்கிழமை இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


புபுரஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயது தந்தையும் 17 வயது மகனுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் வெசாக் பண்டிகையை முன்னிட்டு புபுரஸ்ஸ பிரதேசத்தில் வெசாக் தானம் வழங்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கும் போது திடீரென அப்பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, இவர்கள் இருவரும் அறையொன்றிலிருந்த ஜெனரேட்டரை இயக்கிவிட்டு உறங்கச் சென்றுள்ள நிலையில் மறுநாள் காலை இருவரும் எழுந்திருக்காததால் இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணையில் அறையிலிருந்த ஜெனரேட்டரை இயக்கியதால் அதிலிருந்து வெளியேறிய ஒருவித நச்சுத்தன்மைமிக்க வாயு காரணமாக இவர்கள் இருவரும் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புபுரஸ்ஸ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் கையளிக்கும் நிகழ்வு





(ஹஸ்பர் ஏ.எச்)

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வருமானத்தை பெற்றுத்தரும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கும் நோக்கோடு திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் கடந்த புதன்கிழமை இரண்டு குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரம் மற்றும் ஒரு குடும்பத்திற்கு மிளகாய் தூள் அரைக்கும் இயந்திரம் ஆகியவற்றை வழங்கியது.

திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தலைவர் கதிரவேலு சண்முகம் குகதாசன் இந்த உதவிகளை திருகோணமலையில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து வழங்கி வைத்தார்.

பெண்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கவும் அதிக வறுமானத்தை இத் தொழில் மூலம் ஈட்டிக் கொள்ளவும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.(05)





# மோட்டார் சைக்கிள் ஒன்று தொடருந்துடன் மோதி விபத்து

## மூன்று பேர் உயிரிழப்பு

காலி, புஸ்ஸ, பிந்தலிய சந்தியில் உள்ள பாதுகாப்பு கடவையில் மோட்டார் சைக்கிள் ஒன்று ரயிலுடன் மோதி இடம்பெற்ற கோர விபத்தில் மூன்று இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

மருதானையில் இருந்து மாத்தறை நோக்கி பயணித்த ரயிலில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்து 23 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த மூன்று இளைஞர்களும் 17 முதல் 19 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

எனினும் மூன்று பேர் பாதுகாப்பற்ற முறையில் மோட்டார் சைக்கிளில் பயணம் மேற்கொண்டுள்ளனர் என பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த கடவையில் உரிய முறையில் சமிஞ்சை செயற்படவில்லை என நேரில் பார்த்த பொது மக்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

## தீவுகளுக்கான.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் எழுவைத் தீவுக்கான படகுச் சேவையும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட இடர் முகமைத்துவ பிரதி பணிப்பாளர்சூரியராஜாதெரிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் இருந்து கடல் கடந்து பயணிக்கும் தீவகப் பகுதிகளுக்கான படகுச் சேவைகள்இன்றுசனிக்கிழமையும் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

தென்மேற்கு வங்கக்கடலில் உருவாகிய குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுப்பெற்று நேற்றுக் காலை இலங்கை அருகே மையம் கொண்டிருந்தது. இது தொடர்ந்து வடகிழக்கு திசையில் நகர்ந்து இன்று காலை 05.30 மணிக்கு கிழக்கு-மத்திய வங்கக் கடலில்ஒருசூறாவளிபுயலாககுவிய வாய்ப்புள்ளதுடன் அதன்பிறகு, அது வடக்கு நோக்கி நகர்ந்து தீவிர புயலாக அதே பகுதியில் தீவிரமடையும் என்பதுடன் மிகப் பலத்த காற்று (60-70) வது, உடன் கடல் கொந்தளிப்பாக இருக்குமென எதிர்வு கூறப்பட்டதன் காரணமாக பொதுமக்கள் பாதுகாப் புகருதி கடல் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று என்.சூரிய ராஜா மேலும் தெரிவித்தார்.

இதன் காரணமாக நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவுகளுக்கான கடற்போக்குவரத்துகள் இன்று இடம் பெறமாட்டாது. நயினாதீவிற்கான படகுச் சேவைகள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெறும்

## மழையால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் தங்கவைக்கப் பட்டுள்ளதுடன், அவர்களுக்கான நிவாரணங்களை வழங்கும் வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பலத்த காற்றினால் 1246 வீடுகள் சேதமடைந்துள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பலத்த காற்று மற்றும்மழைகாரணமாகமலையக தொடருந்து மார்க்கத்தில் சில இடங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளமையினால், தொடருந்து சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாவலப்பிட்டிய முதல் பதுளை வரையிலான தொடருந்து மார்க்கத்தின் பல இடங்களில் மரங்கள் முறிந்துவீழ்ந்துள்ளதாகதொடருந்துப் போக்குவரத்து அத்தியட்சகர் ஆ.து. இந்திபொலகே தெரிவித்துள்ளார்.

அத்துடன், சில இடங்களில் கற்பாறைகள், மண்மேடுகள் சரிந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனால், பதுளை - கொழும்பு இடையிலான இரவு நேர தபால் தொடருந்து சேவைகளும் இரண்டு இரவு நேர விசேட தொடருந்து சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

## வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவியேற்று இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலப்பகுதிக்குள் வட. மாகாணத்தின் அபிவிருத்திக்காகப் பல பணிகளை செய்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்திற்கு வழங்கப்படும் இக்கட்டடமானது வடக்கிற்கு வழங்கப்படும் அபிவிருத்தியின் மற்றுமொரு உதாரணமாகவே நான் காண்கின்றேன்.

குறிப்பாக காணி வழங்கல் விவகாரம் தொடர்பில் வடக்கு மக்களின் சார்பாக அவர் தீர்மானங்களைஎடுத்தார். அத்துடன்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்தபோது வடக்கு, கிழக்கு மாகாணங்களின்அபிவிருத்திக்காகப் பல பணிகளைச் செய்துள்ளார்.

## ரணிலுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் மகிந்த ராஜபக்சவிடம் தோல்வியடைந்தார். இதனை ஞாபகப்படுத்தும் விதத்திலேயே சுமந்திரன் தனது உரையில் குறிப்பிட்டுப் பேசினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதமராகஇருந்தகாலம்முதல்வடக்கு மற்றும் கிழக்கின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார். இன்று திறந்து வைக்கப்படும் யாழ்.பல்கலைக்கழகத்தின் இந்த மருத்துவ பீடக் கட்டடம் வடக்கிற்கு மாத்திரமன்றி நாட்டிற்கும் ஒரு நல்ல முதலீடாகும்.

இதுஎதிர்காலத்தில்இலங்கையில் நிபுணர்களின் புகலிடமாக மாறும் என நான் நம்புகிறேன். முன்னதாக இச்சபையில் உரையாற்றியவர்கள் கூறியது போல் யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தியிலும், மக்களின் அபிவிருத்தியிலும்ஜனாதிபதிவிசேட கவனம் செலுத்தியுள்ளார்.

2005இல்உங்கள்பயணத்திற்கு வடக்குமக்கள்தடையாகஇருந்திருக்கலாம்.அதைவடபகுதிமக்கள்இப்போதாவது வருத்தத்துடன் நினைவுகூர்வார்கள் என்று நினைக்கிறேன். இத்திட்டத்தைநடைமுறைப்படுத்திய யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை நான் வாழ்த்துகிறேன்.

இந்த முதலீடு மிகவும் பயனுள்ளதாகஇருக்கும்.யாழ்.மாவட்டத்திற்கு வருகை தந்த ஜனாதிபதியை அன்புடன் வரவேற்பதுடன், இந்தப் பயணத்தின்போது வடக்கிற்கு அவர் ஆற்றிவரும் அனைத்துப் பணிகளையும் பாராட்டுகின்றோம் - என்றார்.

## ரணில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல்யாழ்.பல்கலைக்கழகமருத்துவ பீட மாணவர் ஒன்றியம் இந்தக் கட்டடத்தை நிர்மாணித்து தருமாறு கோரிக்கை விடுத்து வருகின்றது. தற்போது அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், விவசாய பீடம் உட்பட ஏனைய கோரிக்கைகளுக்கும் விரைவாகத் தீர்வுகள் வழங்கப்படும். கடந்த காலங்களில், போராட்டக்காரர்களின் பிடியில் நாடு இருந்தபோது, எதிர்க்கட்சித் தலைவர் உட்பட யாரும் நாட்டைப் பொறுப்பேற்க முன்வரவில்லை. அன்றையதினம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மாத்திரமே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இன்று நாட்டில் பல அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

பயணிக்கமுடியாதவாகனத்தை பொறுப்பேற்று அதனை திருத்தியமைத்து போக்குவரத்திற்கு ஏற்றநிலைக்குகொண்டுவந்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க. எதிர்காலத்தில் அந்த வாகனத்தை மிகச் சிறப்பாக ஓட்டும் திறமை அவருக்கு உண்டு. அதற்குத் தேவையானஅர்ப்பணிப்புஅவரிடம் உள்ளது. ஜனாதிபதி அதைச் செயலில் நிரூபித்ததால் அவர் மீது எங்களுக்கும்நம்பிக்கை உள்ளது.

## வடமாகாணத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தின் 15 பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கிய 1286 இலவசப் பத்திரங்கள் மக்களிடம் வழங்கி வைக்கப்பட்டதுடன், காணி உறுதிப் பத்திரங்களை ஜனாதிபதி அவர்கள் அடையாளமாக சிலருக்கு வழங்கிவைத்தார்.

'உறுமய' வேலைத்திட்டத்தின் கீழ்வடமாகாணத்தின்முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னார்மாவட்டங்களுக்கு13,858 இலவச காணி உறுதிப் பத்திரங்கள் எதிர்காலத்தில்வழங்கப்படஉள்ளன.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது:

கடந்தபொருளாதாரநெருக்கடி காரணமாக இடைநிறுத்தப்பட்ட வடமாகாண வீட்டுத்திட்டம் அடுத்த வருடம் முதல் மீண்டும் தொடங்கப்படும். இந்த இலவச காணி உரிமைத் திட்டம் அதன் ஒரு படியாகும். உறுமய வேலைத்திட்டம் நாட்டிலேயே மிகப்பெரிய தனியார்மயமாக்கல் வேலைத்திட்டம்.

நாட்டு மக்களுக்கு இலவச காணி உரிமை வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இந்த வேலைத் திட்டத்தை நாடளாவிய ரீதியில் அனைத்து பகுதிகளிலும் நடைமுறைப்படுத்துவதே எமது நோக்கமாகும். அனைத்து மக்களுக்கும் அவர்கள் வாழும் மண்ணில் முழு உரிமையுள்ள காணி உரிமை வழங்கப்படவேண்டும்.

இந்தபத்திரங்கள்இன்றுவழங்கப்பட்டதுபோன்று, இந்தப் பணி எதிர்காலத்திலும் முன்னெடுக்கப்படும். காணி ஆணையாளர் திணைக்களத்தில் பணியாளர்கள்பற்றாக்குறையால்,பணிகள் சற்று தாமதமாகி வருகின்றன.

அதுபற்றி கலந்துரையாடிய பிறகு, காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திற்கு 100 புதிய பணியாளர்களையும், நில அளவைத் திணைக்களத்திற்கு 150 பேரையும் நியமனம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்காலத்தில் இந்த வேலைத்திட்டதை மிகவும் திறமையான முறையில் நடைமுறைப்படுத்த முடியும்.

காணிப் பிரச்சினை வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் கடுமையாகப் பாதித்துள்ளது. அரச காணிகளில் குடியேற்றப்பட்ட மக்களைத் தவிர போரினால் காணிகளை இழந்தவர்கள் ஏராளம். தீர்க்கப்பட வேண்டியஇரண்டுபிரச்சினைகள் உள்ளன. வடக்கு மற்றும் கிழக்கைப்பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது என்னுடன் இது குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

அதற்கமைவாக, பாதுகாப்புத் தரப்பினருடன் கலந்துரையாடி, பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ளகாணிகளில்,விடுவிக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்களில் அந்த அனைத்துகாணிகளும்மக்களிடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வனவளப் பாதுகாப்புத்துறை கையேற்ற காணிகள் குறித்தும் பிரச்சினை உள்ளது. இந்தப் பிரச்சினை வடக்கு கிழக்கில் மட்டுமல்ல. தென்மாகாணத்திலும் உள்ளது. எனவே, 1985வரைபடத்தின்படி, காடுகளாக உள்ள பகுதிகளை, காடுகளாகபேணவும், மீதமுள்ள காணிகளை காடு அல்லாத பகுதிகளாக கருதவும் கொள்கை ரீதியான முடிவு எடுத்துள்ளோம். தற்போது அது தொடர்பில் ஆலோசித்து வருவதோடு குறிப்பிட்ட காணிகளைவழங்குமாறும்தெரிவித்துள்ளோம். தொல்பொருளியல் திணைக்களத்தின் கீழும் அதிக அளவிலான காணிகள் உள்ளன.

தொல்பொருளியல் நடவடிக்கைகளுக்கு தேவையான காணிகளை தவிர்த்து ஏனைய காணிகளை மீள ஒப்படைக்க ஆளும்தரப்புத்தீர்மானித்துள்ளது. அதன் பிரகாரம் இந்தக் காணிகள் அனைத்தையும்விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அத்துடன் யாழ்ப்பாணத்தின் உயர்பாதுகாப்பு வலயம் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது. விசேட ஆய்வுகளின் பின்னர் மேலும் விடுவிக்கப்படக்கூடிய காணிகளை விடுவிக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

அத்துடன், உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மத வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான காணியின் ஒரு பகுதி ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க நாட்டின் அனைத்து மக்களினதும்காணிஉரிமையை உறுதிப்படுத்தி முன்னோக்கிச் செல்வதற்கான வாய்ப்பை உருவாக்க எதிர்பார்க்கின்றேன்.

அத்துடன் கடந்த இரண்டு வருடங்களாகஏற்பட்டபொருளாதார நெருக்கடிகாரணமாகஇம்மாகாண மக்களுக்குத்தேவையானவீடுகளை நிர்மாணிப்பதற்கான நிதியை ஒதுக்க முடியவில்லை. ஆனால் அடுத்த ஆண்டு முதல் மீண்டும் அது ஆரம்பிக்கப்படும் என்பதைக் கூற விரும்புகிறேன்.

இந்த இலவச பத்திரங்களை வழங்குவதும் அந்த திட்டத்தின் ஒரு பகுதி என்றுதான் கூற வேண்டும். இலவசப் பத்திரங்களை வழங்குவதைஇந்நாட்டின்மிகப்பெரிய தனியார்மயமாக்கும் திட்டம் என்று கூறலாம்..

ஜப்பான், கொரியாவைத் தவிர வேறு எந்த நாடும் இந்த வகையில் மக்களுக்கு காணி உரிமை வழங்கவில்லை. அந்த நாடுகள்கூட மக்களுக்கு இலவசமாக காணிஉரிமையைவழங்கவில்லை. குறைந்தவிலையில்வாங்குவதற்கான வாய்ப்பை மட்டுமே தருகின்றன. ஆனால் எமது நாட்டில் மக்களுக்கு இலவச காணி உரிமையை வழங்குவதற்காக செயற்பட்டு வருகின்றோம்.

பருத்தித்துறையிலிருந்து தேவேந்திரமுனை வரையிலும் மட்டக்களப்பில்இருந்துநீர்கொழும்பு வரையிலும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். இலங்கை மக்கள் தங்கள் இனம் அல்லது மதம்எதுவாக இருந்தாலும் பாரம்பரியமாக காணி உரிமையை மதிக்கின்றனர். இன்றுநீங்கள்அதை சரியாகப்புரிந்துகொள்கிறீர்கள். அந்த நிலத்தைப் பாதுகாத்து உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுப்பது உங்கள் பொறுப்பு என்பதை நினைவூட்ட விரும்புகிறேன் என்றார்.

# சன்மார்க்க வழி நடந்த சம்பந்தப் பெருமான் !


மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் .... ஆஸ்திரேலியா


வேதநெறி வந்தார் மேலான சைவநெறி
பூதலத்தில் பொலிந்திடவே புகலியிலே பிறந்தார்
சாதனையின் நாயகனாய் சன்மார்க்க வழிபற்றி
காதலுடன் தமிழ்பாடி கருத்துரைக்க வந்தாரே

பக்திப் பெருவெளியில் பதினாறு ஆண்டுகளே
பரமன் புகழ்பாடி பண்ணோடு பாடல்தந்தார்
தத்துவத்தைப் பக்குவமாய் தமிழிலே தந்திட்டார்
சித்தமெலாம் சிவனாக இத்தரையில் வாழ்ந்திட்டார்

பிஞ்சுப் பருவத்தில் பெம்மானைக் கண்டார்
பெருமாட்டி உமையம்மை பாலூட்டி நின்றாள்
உயர்ஞானம் உமையீந்த பாலினுள் இருந்ததால்
பாலுண்ட குழந்தையும் பக்குவத்தைப் பெற்றது

அம்மையொடு அப்பனை அவருமே கண்டார்
அதனாலே அவருள்ளம் அழுக்ககன்று போனது
தோடுடைய செவியன் சொல்லகத்தில் எழுந்தது
ஈடில்லா இறையும் இறங்கியருள் சுரந்தது.


காணாத காட்சியைச் சம்பந்தர் கண்டார்
கற்பனைக்கு எட்டாத ஜோதியையும் கண்டார்
ஞானத்தின் திருவுருவாய் நானிலத்தில் நின்றார்
நல்லவண்ணம் வாழ்கவென்று நயந்துமே சொன்னார்

இயற்கைக் காட்சிகளை எண்ணியெண்ணி ரசித்தார்
இயற்கையோ டிறைவனை இணைத்துமே மகிழ்ந்தார்
பார்க்கும் இடமெல்லாம் பரம்பொருளைக் கண்டார்
பாடினார் பாடினார் பக்தியோங்கப் பாடினார்

குழந்தைப் பருவத்தில் குறைவில்லா ஞானம்
கொடையாகக் கிடைத்ததனால் குறைவின்றிக் கொடுத்தார்
தத்துவத்தை பக்குவமாய் தமிழாக ஈந்தார்
இத்தரையில் சம்பந்தர் ஏற்றிட்டார் பலபணிகள்

பெண்களைப் போற்றினார் பேறென்றே எண்ணினார்
பக்தியினை வளர்ப்பதற்கு பக்கதுணை ஆக்கினார்
சைவத்தைப் பரப்புதற்கு சன்மார்க்கச் சம்பந்தர்
சக்தியாய் பெண்ணினத்தை தானெண்ணி நின்றார்

வம்பிட்டார் வதங்கிடவே வாதங்கள் செய்தார்
கும்பிட்டார் பின்தொடரக் கோவிலெங்கும் சென்றார்
கண்பட்ட சமணரை காணாதே போனார்



மண்தொட்டு
நடைபயின்றார் மாசில்லாச்
சம்பந்தர்

நீற்றினைப் போற்றினார்
நெஞ்சில் நமச்சிவாய
நிறைந்திடப் பாடினார்
காதலாய் உருகினார்
கசிந்துநீர் மல்கினார்
கடவுளைப் பற்றியே
எண்ணினார் எண்ணினார்
இரங்கியே பாடினார்

அப்பரை அணைத்தார்
ஆறுதல் உற்றார்
உற்றதுணை என்று
உள்ளத்தால் உணர்ந்தார்
காலத்தால் இணைந்தார்கள்
கடமையாய் சைவநெறி
காத்திடவே உழைத்தார்கள்
கைகூப்பி வணங்கிடுவோம்

# புத்தளத்தில் மரம் சரிந்து வீழ்ந்து மகள் இறப்பு: தந்தைக்கு காயம்

புத்தளம், மாரவில, பிலாகட்டுமுல்ல பிரதேசத்தில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றின்மீது பாரிய மரமொன்று சரிந்து வீழ்ந்ததில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மகள் உயிரிழந்துள்ளதுடன் தந்தை காயமடைந்துள்ளார் என மாரவில பொலிஸார் தெரிவித்தனர்.

மெதகொடபிரதேசத்தைச்சேர்ந்த 36 வயதுடைய திருமணமான பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதன்போது, காயமடைந்த தந்தை மாரவில ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# மோ. சைக்கிளில் சென்றவர் மரத்தில் மோதி உயிரிழப்பு

ஹங்வெல்லபிரதேசத்தில்வீசிய பலத்த காற்றால் வீதியில் விழுந்த மரத்தில்மோதிமோட்டார்சைக்கிளில் சென்ற நபரொருவர் நேற்று (வியாழக்கிழமை)உயிரிழந்துள்ளார் எனபொலிஸார்தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் மற்றொரு குழுவினருடன் வெசாக் பண்டி கைக்கால உணவு வழங்கும் நிகழ்வை ஏற்பாடு செய்வதற்கான மின் உற்பத்திக்கான எரிபொருளை எடுத்து வந்து கொண்டிருந்த போது வீதியின் குறுக்கே விழுந்த மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், உயிரிழந்த நபர் 47 வயதுடையஇரண்டுபிள்ளைகளின் தந்தையான உபுல் அநுருத்த தெஹிவலலியனகேஎன்பவராவார். (05)

# மோட்டார் சைக்கிள் மீது மரம் சரிந்து விழுந்து ஒருவர் காயம்

ஹற்றன், பொகவந்தலாவை வீதியில்வனராஜாவத்தைபகுதியில் புதன்கிழமைமோட்டார்சைக்கிளில் பயணித்தவர் மீது மரமொன்று சரிந்து வீழ்ந்துள்ளது.

குறித்த பகுதியில் வீசிய கடும் காற்றால்மரம்சரிந்துவீழ்ந்துள்ளது.

இந்த சம்பவத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர் டிக்கோயா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார். (05)

# சீதுவை–லியனகேமுல்ல மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் இறப்பு

(எம்.எச்.எம் சியாஜ்)

சீதுவைபொலிஸ்பிரிவிற்குட்பட்ட நீர்கொழும்பு - கொழும்பு வீதியில் லியனகேமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சீதுவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்

உயிரிழந்தவர் கந்தானை பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயது நபர் ஆவார்.

நீர்கொழும்பிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் பயணித்த பாதசாரி ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த பாதசாரி சீதுவ விஜய குமாரதுங்க வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரது சடலம் விஜய குமாரதுங்க வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்றவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சீதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமைகுறிப்பிடத்தக்கது.(05)

# குண்டும் குழியுமாகக் காணப்படும் ஆலம்குளம் செல்லும் பிரதான வீதி



(எம்.எப்.றிபாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குற்பட்டமுல்லைத்தீவிலிருந்து ஆலம்குளத்திற்கு செல்லும் பிரதான வீதியின் இடை நடுவில் குண்டும் குழியுமாக காணப்படுவதால் பிரயாணிகள்பல்வேறுசிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அட்டாளச்சேனையிலிருந்து இவ்வீதியூடாக அம்பாறை, தீகவாபி, இறக்காமம், வரிப்பத்தான்சேனை, ஆலம்குளம், சம்புநகர் போன்ற பிரதேசங்களுக்கு நாளந்தம் நூற்றுக்கணக்கான அரச ஊழியர்களும், பொதுமக்களும், பாடசாலை மாணவர்களும், வயல் நிலங்களுக்கு செல்லும் விவசாயிகளும் சென்று வருகின்றனர்.

ஆகவே பொதுமக்களின் நண்மைகருதி அட்டாளைச்சேனை பிரதேச சபை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு குண்டும் குழியுமாக காணப்படும் குறித்த வீதியைப் புணரமைத்து தருமாறுஇப்பாதையூடாகபிரயாணம் செய்யும் பொதுமக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.(05)

# கஞ்சி வழங்கினால் பரிசோதிக்க வரும் சுகாதார அதிகாரிகளை வெசாக் தன்சல்களில் காணோம்

## செல்வராஜா கஜேந்திரன் காட்டத்துடன் கேள்வி



கஞ்சி வழங்கினால் பரிசோதிக்க வரும் சுகாதார அதிகாரிகளைவெசாக்தன்சல்களில்காணமுடியவில்லை எனநாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் முகநூல் பதிவொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

தமிழ் மக்கள் கஞ்சி கொடுத்தால் கைது செய்து சிறையில் அடைக்கிறார்கள்.

ஆனால் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஐஸ்கிறீம் கொடுக்கலாம்.

கஞ்சிவழங்கினால்இனநல்லிணக்கம்குழம்புமென தடைகொடுக்கும் மன்றங்கள், சிங்களவர்கள் வசிக்காத வடக்கு கிழக்கில் வெசாக் கொண்டாடினால் இனநல்லிணக்கம் பாதிக்கப்படுமென தடை வழங்கவில்லை.

கஞ்சி வழங்கினால் பரிசோதிக்க வரும் சுகாதார அதிகாரிகளை,வெசாக்தன்சல்களில்காணமுடியவில்லை.

வீதியோரமாகஅனுமதியின்றிஒருசிறுவியாபாரியால் கடை போட முடியாது. ஆனால் இராணுவத்தினரால் அனுமதியின்றி ஆரிய குளத்தினுள் வெசாக் கூடுகளைக் கட்டமுடியும்.

தமிழ் மக்களுக்கு ஒரு நியாயம். சிங்களவர்களுக்கு இன்னொரு நியாயம்.

நம்புங்கள். இலங்கை ஜனநாயக நாடு. இங்கு சட்டத்திற்கு முன் அனைவரும் சமம். - என்றுள்ளது.(05)

# யாழ்ப்பாணத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்ட இளைஞர்களிடையே வாள் வெட்டு

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவம் ஒன்றில் காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் ஈடுபட்டதுடன் மூவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தொல்புரம்பகுதியில்செவ்வாய்க்கிழமைஇடம்பெற்ற மோதல் சம்பவத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்ட இளைஞர்கள் இடையே மோதல் ஏற்பட்டு வாள்வெட்டில் முடிந்துள்ளது.

இதில் பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்ட மூவர் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், தனிப்பட்ட முரண்பாடே வாள் வெட்டு சம்பவத்திற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(05)

# போதை மாத்திரைகளுடன் கைதான ஊடகருக்கு மேலும் 14 நாள்கள் மறியல்

திருகோணமலை மாவட்டத்தின் மொறவெள பொலிஸ் பிரிவில் போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்ட பிரதேச ஊடகவியலாளர் மொறவெள நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் 20.5.2024 அன்று ஆஜர்படுத்தப்பட்ட போது எதிர்வரும் மேலும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

குறித்த ஊடகவியலாளர் பிரதான வீதி, றொட்டவெள ,மொறவெள (வயது 42) எனும் பிரதேசத்தை சேர்ந்த இவர் 30 போதை மாத்திரைகள் உட்பட மோட்டார் போக்குவரத்து ஆவணங்கள் 45 உடன் கடந்த 05.05.2024 ஆந் திகதி அன்று மொறவெள பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த பிரதேச ஊடகவியலாளர் அரச, தனியார் ஊடகங்களில் பிரதேச செய்தியாளராகவும் அரச வைத்தியசாலையொன்றின் ஊழியர் எனவும் தெரியவருகிறது.

மோட்டார்போக்குவரத்துஆவணங்கள்தொடர்பிலான பிரிதொரு விசாரனை மூலமாகவும் வழக்கு ஒன்றும் இடம் பெற்று வருகின்றமை தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரனைகளை மொறவெள பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (05)

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையும் விரைவில் தேசிய வைத்தியசாலையாகுமாம்

## ஜனாதிபதி ரணில் உத்தரவாதம்

யாழ் போதனா வைத்தியசாலை, தேசிய வைத்தியசாலை விரைவில் தரமுயர்த்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ் போதனா வைத்தியசாலை அருகில் அமைந்துள்ள மருத்துவ பீட கட்டடத்தை நேற்று (வெள்ளிக்கிழமை) திறந்து வைத்த வைபவத்தில் கருத்து தெரிவிக்கும்போதே இதனை கூறியுள்ளார்.

இலங்கையில் கொழும்பு தேசிய வைத்தியசாலை பல வருடங்களாக இயங்கி வந்த நிலையில் இரண்டாவதாக 5 வருடங்களிற்கு முன்னர் கண்டி போதனா வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாக தர முயர்த்தப்பட்டது.

மூன்றாவதாக அண்மையில் காலி போதனா வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது.இனிவரும்காலங்களில்யாழ்.போதனா வைத்தியசாலை தேசிய வைத்தியசாலை தரமுயர்த்தப்படுவது காலத்தின் தேவை. - என ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.(05)

# அஹுங்கல்ல துப்பாக்கிச் சூடு ; மற்றுமொரு உதவியாளர் கைது

அஹுங்கல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு உதவி செய்ததாகக் கூறப்படும் சந்தேக நபரொருவர் அஹுங்கல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சந்தேக நபர் உரகஸ்மன்ஹந்திய பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

உரகஸ்மன்ஹந்திய பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுநபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து 4 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்காக துப்பாக்கி தாரிகளுக்குத் தகவல் வழங்கி உதவி செய்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அஹுங்கல்லபொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர்.

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் வடமேல்மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் கரிசனை

(எம்.எம்.ஜெஸ்மின்)

வடமேல் மாகாணத்தில் ஆசிரிய சேவையில் இணைக்கப்பட்டுள்ளஅபிவிருத்திஉத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் தொடர்பில் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் தீவிர கரிசனையை வெளிப்படுத்தியுள்ளார்.

வடமேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற வடமேல் மாகாண பாடசாலைகளில் ஆசிரிய சேவையில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்க பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஆளுநர்நஸீர்அஹமட்தலைமையில் நடைபெற்றது.

தற்போதைய நிலையில் உடனடியாக ஆசிரிய சேவையில் உள்ளீர்க்கக் கூடிய வகையில் கடந்த காலங்களில் நடைபெற்ற போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு ஆசிரியர் நியமனங்களைப் பெற்றுக் கொடுக்கவும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றாத உத்தியோகத்தர்கள் மற்றும் 35 வயது வரம்பைக் கடந்தவர்கள் தொடர்பில் சகல மாகாண ஆளுநர்களுடன் இணைந்து மத்திய அரசாங்கத்தின் கல்விஅமைச்சுமற்றும்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க ஆகியோருடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் ஆளுநர் தொடர்ந்தும் உறுதியளித்துள்ளார்.

(05)

# மாதம்பேயில் தென்னை நார் தொழிற்சாலையில் தீ பரவல்

## பல கோடி ரூபா நஷ்டம்

மாதம்பேவடக்குமுகுனுவடவன பிரதேசத்தில் உள்ள தென்னை நார் தொழிற்சாலையொன்றில் ஏற்பட்ட தீ பரவலால் பல கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மாதம்பே பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ பரவல் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மின்கசிவு காரணமாக இந்த தீ பரவல் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் போது குறித்த தொழிற்சாலையில் பல கோடி ரூபா பெறுமதியான தென்னை நார்கள் காணப்பட்டுள்ளதுடன் அவற்றில் சிலவற்றை எந்தவித சேதமுமின்றி மீட்க முடிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீ பரவலைக் கட்டுப்படுத்தும் பணிகள் சிலாபம் மாநகரசபையின் தீயணைப்பு படையினரால் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# 51 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இருவர் கைது

## கட்டுநாயக்கவில் சம்பவம்

51லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான 51,600 வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் பெண் உட்பட இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம்,மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடையவர்த்தகப்பெண்ணொருவர்வியாழக்கிழமை அதிகாலை 05.15 மணியளவில் இந்தியாவிலிருந்து விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ள நிலையில் அவர் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து 17 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான 17,200 வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கொழும்பு, மோதரை பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய வர்த்தகரொருவர் வியாழன் அதிகாலை 05.20 மணியளவில் டுபாயிலிருந்து விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ள நிலையில் அவர் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து 24 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான 24,600 வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், இவரிடமிருந்து 9 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான 9,800 வெளிநாட்டுசிகரெட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு பின்னர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# ராகலையில் சீரற்ற காலநிலையால்; மரம் முறிந்து விழுந்து ஒருவர் சாவு

நுவரெலியா மாவட்டத்தில் தொடரும் சீரற்ற காலநிலை நிலை காரணமாக ராகலை மாகுடுகலை பகுதியில் மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என ராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் வீசிய கடும் காற்றால் குறித்த மரம் சரிந்து விழுந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் மஸ்கெலியாவை பிறப்பிடமாகவும் திருமணத்தின் பின்னர் மனைவியுடன் கந்தப்பளை ஹைபோரஸ்ட் இலக்கம் ஒன்றில் வசித்து வந்த கந்தசாமிராஜ்குமார் 38 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை எனத் தெரிவிக்கப்படுகின்றது குறித்த சம்பவம்வியாழக்கிழமைஇடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்று சோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில்வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# யாழ். பல்கலைக்கழக கட்டட திறப்பு விழாவை எதிர்த்து கல்விசாரா ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்






நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ளநிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் புதிய கட்டடம் திறந்துவைத்தமையை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.





நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணியளவில் பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் மருத்துவபீடம் மற்றும் பல்கலைக்கழக பிரதான வளாக வாயிலில் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டிருந்தனர்.

கல்விசாரா பணியாளர்கள் சம்பள உயர்வு மற்றும் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து 02.05.2024 நண்பகல் முதல் தொடர்ச்சியாக தொழிற்சங்க போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில்மாணவர்களின்கற்றல்செயற்பாடுகள் இன்றி சகல பல்கலைக்கழகங்களும் செயற்படாது இருக்கின்றவேளையில் எமது கோரிக்கைகளை தீர்த்துவைத்தலில் எவ்வித அக்கறையுமற்று காலங்கடத்தப்படுகின்றதாக ஊழியர்கள் சுட்டிக்காட்டினர்.

இருந்தபோதிலும் இவ்வேளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் யாழ்.போதனா வைத்தியசாலையுடன் இணைந்த புதிய கட்டடத்தொகுதி ஜனாதிபதி ரணில், கல்வியமைச்சர், பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழுவின்தலைவர்உள்ளிட்டோர் கலந்துகொண்டுதிறந்துவைக்கப்பட்டதாககுறிப்பிட்டனர்.

இதனை யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கண்டிப்பதோடு இச்செயற்பாடு எமது தொழிற்சங்கப் போராட்டத்தை மலினப்படுத்தும் செயற்பாடாக காணப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.(05)

# இலங்கையிலும் அதற்கு அப்பாலும் வரலாறு கண்ட நிகழ்வுகள் நூல்

## திருகோணமலையில் அறிமுக விழா



(ஹஸ்பர் ஏ.எச்)

வரலாற்று ஆய்வாளர் தோமஸ் ஜெயேந்திரன் எழுதிய ' இலங்கையிலும் அதற்கு அப்பாலும் வரலாறு கண்ட நிகழ்வுகள் ' நூல் அறிமுக விழா திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகத்தின் ஏற்பாட்டில், நூலக உதவியாளரும் எழுத்தாளருமான அ . அச்சுதன் தலைமையில் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நூலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக திருகோணமலை நகராட்சிமன்றத்தின் செயலாளர் வெ.இராஜசேகரும், சிறப்பு விருந்தினராக திருகோணமலை நகரசபை பொது நூலகத்ன் பிரதம நூலகர் ந.யோகேஸ்வரனும் கலந்து சிறப்பித்தனர்.

ஆரம்ப நிகழ்வாக வரவேற்புரையை நூலகர் திருமதி மு.லை.றிம்சானா வழங்க, நிகழ்ச்சித் தொகுப்பை செல்வி தாஹிரா சித்திக் வழங்கினார்.

நூலின் முதல் பிரதியை நூல் ஆசிரியர் நிகழ்வின் முதன்மை விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர், நிகழ்வின் தலைமை ஆகியோருக்கு வழங்கப்பட்டது.



சிறப்புரையை கவிஞர் ச. திருச்செந்தூரன் வழங்கினார் நூலாசிரியர் ஏற்புரையை வழங்கினார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

## வீதியில் வீழ்ந்திருந்த மரத்தில் மோ.சைக்கிள் மோதி விபத்து

### ஒருவர் உயிரிழப்பு

ஹங்வெல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாதுக்க - வக வீதியில்இடம்பெற்றவிபத்தில்ஒருவர் உயிரிழந்துள்ளார்எனஹங்வெல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

தும்மோதர பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயது நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வகயிலிருந்து பாதுக்க நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் வீழ்ந்திருந்த மரமொன்றில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர் பாதுக்க வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் பாதுக்க வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹங்வெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## காட்டு யானை தாக்கி ஒருவர் பரிதாபச் சாவு

### மகாஓயாவில் சம்பவம்

மகாஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாதுரு ஓயா பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என மகாஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மகாஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## சமாதான நீதிவானாக அபுசாலிபு முஜாஹித் சத்தியப் பிரமாணம்

(எச் எம் ஹலால்தீன்)

கிண்ணியா, ஈச்சந்தீவு,குஞ்சி முகம்மது ஹாஜியார் வீதி என்ற முகவரியில் வசிக்கும் அபுசாலிபு முகம்மது முஜாஹித், தீவு முழுவதற்குமான ஒரு சமாதான நீதிவானாக திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.கணேஷராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

சமூக ஆர்வலராக இருக்கும் இவர் தனது ஆரம்பக் கல்வி தொடக்கம் க.பொ.த. உயர் தரம் வரை தி/கிண்ணியா அல் அக்ஸா கல்லூரியிலும் கலைமானி பட்டத்தை இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை இலங்கை திறந்தபல்கலைக்கழகத்திலும்,உயர் தேசிய ஆங்கில டிப்ளோமாவை இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்திலும் சிங்கள டிப்ளோமாவை இலங்கை களனிப் பல்கலைக்கழகத்திலும் கற்றுள்ளார்.

தற்போது திருகோணமலை வெள்ளை மணல் அல் அஸ்ஹர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இரண்டாம் மொழி (சிங்களம்) ஆசிரியராக பணியாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.05.2024இல் வெளியிடப்பெற்றது